# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 11,639 — 1959 ජනවාරි 12 වැනි සඳුදා — 12.1.1959

11,639 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் என். ஈ. 43. மீன்கருவாடும் இறால்கருவாடும்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உபவிலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) ஆத்தர் கத்பேர்ட் பர்தோலோமியுஸ் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 28 ந் திகதியைக்கொண்ட 11,460 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட என். ஈ. 37 இலக்கமுள்ள விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணை "அ"வில் 2 தொடக்கம் 18 வரையும் உள்ள பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளையே அதே பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு முறையே நிகர அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையிலுள்ள பொருட்களை அதே அட்டவணை "அ"வில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்குக் கூடுதலாக விற்கலாகாது ;

(3) இதனோடிருக்கும் அட்டவணை "ஆ"வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளே அதே பத்திகளில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு முறையே நிகர இறுத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடுதலான விலைகளாகும். குறித்த அட்டவணையிலுள்ள பொருட்களை அதே அட்டவணை "ஆ"வில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்கு கூடுதலாக விற்கலாகாது ;

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதில் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(இ) மீன்கருவாடு அல்லது இறால்கருவாடு வழக்கமாக மொத்தமாக விற்பவர் எவரும் "மொத்த வியாபாரி" எனக் கருதப்படும் ;

(ஈ) மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை அட்டவணை "அ" வின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைக்குள் மொத்த வியாபாரத்துக்கென விதிக்கப்பட்ட விலைகளாகும் ;

(உ) "ஆகக்கூடிய சில்லறை விலை" என்பது எல்லாச் சில்லறை விற்பனைகளையும் குறிக்கும் ;

(ஊ) "காய்ந்த மீன்" என்பது மீன்கருவாட்டையே குறிக்கும் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் எவராவது அட்டவணை "அ"வில் 2 தொடக்கம் 18 வரையும், அட்டவணை "ஆ"வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட மீன் கருவாடு அல்லது இறால் கருவாடுடன் வேறு பொருட்களை கலந்து விற்கலாகாது ;

(6) அட்டவணை "அ"வில் 2 தொடக்கம் 18 வரையும் உள்ள பத்திகளிலும் அட்டவணை "ஆ"வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டுள்ள மீன்கருவாடு அல்லது இறால்கருவாடு தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ் விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப் பொருட்களுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் ;

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இறுத்தல்" அல்லது "இறு" என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படும் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் அட்டவணை "அ" வில் 2 தொடக்கம் 18 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் மீன்கருவாடு அல்லது இறால்கருவாடு மொத்த விற்பனை செய்யும் ஒவ்வொருவரும், அட்டவணை "ஆ" வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் மீன்கருவாடு அல்லது இறால் கருவாடு சில்லறையாக விற்பவர் ஒவ்வொருவரும் அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவன வற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்கப்பட்ட பொருளின் விபரம் ;
(இ) விற்கப்பட்ட பொருளின் நிகர நிறை ;
(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(உ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(9) அட்டவணை "அ"வில் 2 தொடக்கம் 18 வரையும் உள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட மீன்கருவாடு அல்லது இறால் கருவாடு விற்கும்பொழுது அட்டவணை "ஆ" வில் 2 தொடக்கம் 13 வரையும் உள்ள பத்திகளில் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளில் விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணை "அ" வில் 2 தொடக்கம் 18 வரையுமுள்ள பத்திகளிலும், அட்டவணை "ஆ" வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளிலும் விபரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, இறால்கருவாடு தவிர்ந்த மற்றைய எந்த மீன்கருவாடோ கொள்கலத்தில் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக்குறைந்தது கழிவாக பத்து றுத்தல் குறைத்துக் கணக்கிடவேண்டும் ;

(11) அட்டவணை "அ"வில் 14 ம் பத்தியிலும் அட்டவணை "ஆ"வில் 9 ம் பத்தியிலும் குறிக்கப்பட்ட கும்பளா கருவாடு கொள் கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக இருப்த்தைந்து இறுத்தல் குறைத்துக் கணக்கிட வேண்டும் ;

(12) அட்டவணை "அ"வில் 15 ம் பத்தியிலும் அட்டவணை "ஆ"வில் 10 ம் பத்தியிலும் குறிக்கப்பட்டுள்ள பொம்பிலி கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது எட்டு இறுத்தல் குறைத்துக் கணக்கிட வேண்டும் ;

(13) அட்டவணை "அ" வில 16 ம் பத்தியிலும் அட்டவணை "ஆ"வில் 11 ம் பத்தியிலும் குறிக்கப்பட்டுள்ள நெத்தலிக்கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 20 றுத்தல் குறைத்துக் கணக்கிட வேண்டும் ;

(14) அட்டவணை "அ"வில் 17 ம், 18 ம் பத்திகளிலும் அட்டவணை "ஆ"வில் 12 ம், 13 ம் பத்திகளிலும் குறிக்கப்பட்ட ஓடற்ற இறால்கருவாடு அல்லது ஓடுள்ள இறால்கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக்குறைந்தது கழிவாக பதினைந்து இறுத்தல் குறைத்துக் கணக்கிடவேண்டும் ;

(15) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "நிகர" என்பது மீன்கருவாட்டின் அல்லது இறால்கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 9 ந திகதி முற்பகல் 11 மணிக்கு நுவரேலியா கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எ. சி. பர்தோலோமியுஸ்,
உதவி விலை கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நுவரேலியா.

# அட்டவணை "அ"

## நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை

| பத்தி 1 எல்லைகள் | பத்தி 2 அறக்குளா தலையில்லாமல் ரூ. ச. | பத்தி 3 அறக்குளா தலையுடன் ரூ. ச. | பத்தி 4 கட்டா தலையில்லாமல் ரூ. ச. | பத்தி 5 முஞ்சக் கட்டா ரூ. ச. | பத்தி 6 அஞ்சிலா தலையுடன் ரூ. ச. | பத்தி 7 அஞ்சிலா தலையில்லாமல் ரூ. ச. | பத்தி 8 பாரை தலையில்லாமல் ரூ. ச. | பத்தி 9 பாரை தலையுடன் ரூ. ச. | பத்தி 10 கொடுவா தலையில்லாமல் ரூ. ச. | பத்தி 11 கொடுவா தலையுடன் ரூ. ச. | பத்தி 12 பலயா ரூ. ச. | பத்தி 13 தொண்டன் ரூ. ச. | பத்தி 14 கும்பளா ரூ. ச. | பத்தி 15 பொம்பிலி ரூ. ச. | பத்தி 16 நெத்தலி ரூ. ச. | பத்தி 17 ஓடற்ற இறால் கருவாடு ரூ. ச. | பத்தி 18 ஓடுள்ள இறால் கருவாடு ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நுவரேலியா நகர சபைப் பகுதி .. | | | | | | | | | | | | | | | | | |
| 2. கந்தப்பொல .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 3. நானுஓயா .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 4. ரம்பொடை டவுண் .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 5. சங்கிலிபாலம் .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 6. குடாஓய .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 7. பூண்டுலுஓய .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 8. திஸ்புனே கோரலே .. .. | 121 14 | 101 74 | 89 15 | 68 17 | 61 88 | 66 08 | 99 64 | 80 76 | 89 15 | 64 83 | 89 15 | 68 17 | 28 84 | 80 76 | 76 56 | 121 09 | 95 44 |
| 9. பல்லேபுனே கோரலே .. | | | | | | | | | | | | | | | | | |
| 10. மொரபே .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 11. டிலிகுல்ரி .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 12. டயகம .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 13. ஆகரபத்தன .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 14. மெதபுனே கிராமச் சங்கப் பகுதி .. | | | | | | | | | | | | | | | | | |
| 15. ராகல .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 16. உடபுஸ்ஸல்லாவ .. .. | 121 67 | 102 18 | 89 54 | 68 47 | 62 15 | 66 36 | 100 07 | 81 11 | 89 54 | 65 11 | 89 54 | 68 47 | 28 97 | 81 11 | 76 90 | 121 67 | 95 86 |
| 17. நெல்தண்டாஹின்ன .. | | | | | | | | | | | | | | | | | |
| 18. ஹரஸ்பத்த .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 19. வத்துமுள்ளை .. .. | 123 43 | 103 66 | 90 84 | 69 46 | 63 05 | 67 33 | 101 52 | 82 29 | 90 84 | 66 05 | 90 84 | 69 46 | 29 39 | 82 29 | 78 01 | 123 43 | 97 25 |
| 20. கும்பல்கமுவ .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 21. டிம்புள்ள .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 22. வட்டகொடை .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 23. தலவாகொலை .. .. | 119 73 | 100 55 | 88 11 | 67 38 | 61 16 | 65 31 | 98 48 | 79 82 | 88 11 | 64 07 | 88 11 | 67 38 | 28 51 | 79 82 | 75 67 | 119 73 | 94 33 |
| 24. லிந்துல்ல .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 25. வலஹா .. .. | | | | | | | | | | | | | | | | | |
| 26. கொட்டகல .. .. | | | | | | | | | | | | | | | | | |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

## அட்டவணை " ஆ "

சில்லறை வியாபாரி நிகர இறுத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எல்லைகள் | அறக்குளா | கட்டா | அஞ்சிலா | பாரை | கொடுவா | பலயா | தொண்டன் | கும்பளா | பொம்பிலி | நெத்தலி | ஓடற்ற இறுல் கருவாடு | ஓடுள்ள இறுல் கருவாடு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. நுவரேலியா நகர சபைப் பகுதி | | | | | | | | | | | | |
| 2. நானுஓய | | | | | | | | | | | | |
| 3. கந்தப்பொலே | | | | | | | | | | | | |
| 4. ராகலே | | | | | | | | | | | | |
| 5. உடபுஸ்சல்லாவ | | | | | | | | | | | | |
| 6. ரம்பொட பவுண | | | | | | | | | | | | |
| 7. சங்கிலிபாலம் | | | | | | | | | | | | |
| 8. குடாஓய | | | | | | | | | | | | |
| 9. பூண்டலுஓய | | | | | | | | | | | | |
| 10. திஸ்பனே கோரல | | | | | | | | | | | | |
| 11. பல்லேபனே கோரல | 1 29 | 0 91 | 0 73 | 1 05 | 0 89 | 1 00 | 0 73 | 0 31 | 0 94 | 0 89 | 1 15 | 0 89 |
| 12. மொறபே | | | | | | | | | | | | |
| 13. டிலிகுல்டிரி | | | | | | | | | | | | |
| 14. டயகம | | | | | | | | | | | | |
| 15. ஆகரபத்தன | | | | | | | | | | | | |
| 16. மெதபுனே கிராமச் சங்கப் பகுதி | | | | | | | | | | | | |
| 17. டிம்புள்ள | | | | | | | | | | | | |
| 18. வட்டகொடை | | | | | | | | | | | | |
| 19. தலவாகொல்லே | | | | | | | | | | | | |
| 20. லிந்துல்ல | | | | | | | | | | | | |
| 21. வலஹா | | | | | | | | | | | | |
| 22. கொட்டகொலே | | | | | | | | | | | | |
| 23. அம்பவெலே | | | | | | | | | | | | |
| 24. நெல்தண்டாஹீன்ன | | | | | | | | | | | | |
| 25. ஹரஸ்பத்த | 1 33 | 0 94 | 0 76 | 1 08 | 0 92 | 1 03 | 0 76 | 0 32 | 0 97 | 0 92 | 1 19 | 0 92 |
| 26. வத்துமுள்ள | | | | | | | | | | | | |
| 27. கும்பல்கமுவ | | | | | | | | | | | | |
| 28. ருபாஹா | 1 34 | 0 95 | 0 77 | 1 09 | 0 93 | 1 04 | 0 77 | 0 33 | 0 98 | 0 93 | 1 20 | 0 93 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்கலாகாது.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.